மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No.40/2024

வாக்குமூலம்: வா.சா.1 – நித்யானந்தம்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

11.07.2025: சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வா.சா.ஆ.2 தானபத்திரம் பதியும் போது வேணுகோபால் மனைவி சுஜாதா ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவரை எதிர்த்து போட்டியிட்டவர் தாமோதரன் மனைவி மணிமேகலை என்றால் சரிதான். மேற்படி தாமோதரன் மற்றும் மணிமேகலை ஆகியோர் ஊராட்சி தலைவராக இருக்த போது பஞ்சாயத்து பணத்தை கையாடல் செய்த குற்றத்திற்காக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரால் அவர்களுடைய காசோலை பவரை நிறுத்தி வைத்தார் என்றால் எனக்குத் தெரியாது. தானப் பத்திரம் பதிந்தது எனக்கு எப்படி தெரியும் என்றால் இதற்கு முன்னால் வேறு பிரதிவாதிகளுக்கு சுமார் 40 செண்ட் மற்றும் சுமார் 50 செண்ட் இடத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள், மேற்படி கிரையம் வாங்கியவர்கள் சொல்லித்தான்எனக்குத் தெரியும். வா.சா.ஆ.2 ஐ நான் படித்துப் பார்த்துள்ளேன். அதில் 1 ஆம் பிரதிவாதியின் நிலத்தில் பஞ்சாயத்து ரோட்டிற்காக 33,015 சதுரடி ஒதுக்கியுள்ளார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. தானப்பத்திரத்தில் 2 வது அயிட்டமாக துலக்கப்பட்டுள்ள 1900 சதுரடி தான் நான் ஆட்சேபணை செய்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் 1900 சதுரக்கு கிழக்கு மாலாக குறிப்பிடப்பட்டது தவறு. வா.சா.ஆ.2 ஆன தானப்பத்திரத்தில் பஞ்சாயத்தில் போட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தான் பதியப்பட்டது என்றால் சரிதான், ஆனால் மேற்படி தீர்மானம் தவறாக போடப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி தீர்மானம் தவறாக போடப்பட்டது எனக்கு பஞ்சாயத்து மூலம் தெரிவிக்கப்பட்டு அதற்கான ஆவணம் என்னிடம் கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வழக்கறிஞர் மூலமாக 14.09.2009 ஆம் தேதி தினத்தந்தி நாளிதழில் 1 ஆம் பிரதிவாதி தனது வீட்டடி மனையை lay out Approvel வாங்காமல் கிரையம் செய்ய எத்தனித்து வருகிறார் என்று பொதுமக்களுக்கு தெரியப்படுத்த விளம்பரம் கொடுத்தேன் என்றால் சரிதான், மேற்படி பொது அறிவிப்பு எதற்காக கொடுத்தேன் என்றால் என்னுடைய 6 செண்ட் சொந்த இடத்தை எடுத்து பஞ்சாயத்து Approval க்கு கொடுத்துள்ளதால் நான் விளம்பரம் கொடுத்தேன், மேற்படி அறிவிப்பை

பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 முதல் 4 ஆம் பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் CPC Sec.80 ன் படி முன்னறிவிப்பு கொடுக்காமல் வழக்கு தாக்கல் செய்துளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல, என்னிடத்தை காப்பாற்றும் பொருட்டு நான் அந்த அறிவிப்பை கொடுத்தேன். 1 ஆம் பிரதிவாதி வெளியூரில் இருப்பதால் அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எவ்வித காரணமும் இன்றி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 1 ஆம் பிரதிவாதிக்கு அதிகப்பட்ச செலவுத் தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/– S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.